திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்

முன்னிலை திரு பெ.கிருஷ்ணன் 003052 800/2024 29/10/2025

ந.க.308580-2/2022/பஅ3

நாள்: .10.2025.

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திருவண்ணாமலை மாவட்டம் - 2022-2023-ம் ஆண்டிற்கான ஊராட்சி செயலர் நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீட்டில் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.917/சிடி-அ3/2024.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை, சென்னை அவர்களின் கடிதம் (2ப) எண்.118, நாள்:17.12.2024.
3. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.11520/2023/பி3, நாள்:24.12.2024.
4. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறைகள் ந.க.எண்.308580/2022/பஅ3, நாள்: 31.12.2024.
5. தனியர்களது பணிசேர் அறிக்கை

**உத்தரவு:**

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் 2022-2023-ம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 / காசாளர் பதவிகளில் உள்ள காலிப்பணியிடங்களில் ஊராட்சி செயலர் நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 சதவிகித காலியிட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர் நிலையில் பதவி உயர்வு வழங்கி பணிநியமனம் அளித்து உத்தரவிடப்பட்டது.

இதன்படி, கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியாளர்கள், இளநிலை உதவியாளர் நிலையிலான பதவியில் பணியில் சேர்ந்த விவரம் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் அலுவலகம் திருவாளர்கள் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட தேதி |
|---|---|---|---|
| 1. | மு.முருகன், ஊர்நல அலுவலர் நிலை-2, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம். | 02.01.2025 முற்பகல் | 02.01.2025 முற்பகல் |
| 2. | பு.இராதாகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம். | 01.01.2025 முற்பகல் | 01.01.2025 முற்பகல் |
| 3 | ஏ.குணசேகர், இளநிலை உதவியாளர், கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம். | 06.01.2025 பிற்பகல் | 06.01.2025 பிற்பகல் |

மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்கள் இளநிலை உதவியாளர் நிலையிலான பதவியில் கலம்(4)ல் குறிப்பிட்ட தேதியான அதாவது பணியில் சேர்ந்த தேதி முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்படி, தனியருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இவரின் தகுதிகாண் பருவம் துவங்கும் மற்றும் இவரின் தகுதிகாண் பருவகாலம் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் ஆகும்.

மேலும், இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கான தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தவறாமல் தேர்ச்சி பெற வேண்டும்.

7/10/25

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திருவண்ணாமலை.

**பெறுநர்:**
சம்மந்தப்பட்ட பணியாளர் — உரிய வழிமுறையாக 7/10/25

**நகல்:** ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
**நகல்:** திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை.
**நகல்:** வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/ கி.ஊ), அனக்காவூர், கலசபாக்கம் மற்றும் வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்.
**நகல்:** பஅ3 இருப்புக் கோப்பு.

ப அ1/800/2024 கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம்
நாள்: 29.10.2025

அனுப்பப்படுகிறது.

29/10/25
BLOCK DEVELOPMENT OFFICER (B.P)
KALASAPAKKAM

பெறுநர்: 29/10/2025
திரு. ஏ. குணசேகர்
இளநிலை உதவியாளர்
கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம்.